

புதுக்கோட்டை வடக்கு – தெற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி – மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் வடக்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் வரவேற்பில், அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், பவானி ராஜேந்திரன், சத்யா பழனிகுமார், ரேகா பிரியதர்ஷிணி, டாக்டர் யாழினி ஆகியோர் பங்கேற்று அலோசனைகளை வழங்கினர். நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், சுப.சரவணன், கே.ஆர்.என்.போஸ், டாக்டர் அண்ணாமலை ரகுபதி, அரு.வீரமணி, பி. ராஜேஸ்வரி, ஞான.இளங்கோவன், அடைக்கலம், துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ், அபிதாஹீர், மு.க.ராமகிருஷ்ணன், வழக்கறிஞர் மணவழகன், டாக்டர் செ.குறிஞ்சிவாணன், தவசு மணி அ.பிரபா, தேவி, சையது அலி பாத்திமா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



புதுக்கோட்டை அன்னவாசலில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, மாபெரும் பொதுக்கூட்டம் வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் ஒன்றியச் செயலாளர்கள் எம்.பழனியப்பன், கே.எஸ்.சந்திரன் ஆகியோர் வரவேற்புரையில் நடைபெற்றது. இதில் திண்டுக்கல் லியோனி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.




சேலம் மத்திய மாவட்டம் சேலம் வடக்கு ஒன்றியத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தையொட்டி கிரிக்கெட் மற்றும் கைபந்து போட்டி நடைபெற்றது. வெற்றி பெற்ற வீரர்களுக்கு வடக்கு ஒன்றியச் செயலாளர். ரொயின் போ நடராஜன் முன்னிலையில் அமைச்சர். இரா.இராஜேந்திரன். பரிசுகள் வழங்கினார். உடன் மாவட்டப் பொருளாளர். மு.கார்த்திகேயன் தொகுதிப் பொறுப்பாளர் ஈ. ஜி. சுகவனம். தளவாய்ப்பட்டி ராஜா, வடிவேல் உட்பட கழக நிர்வாகிகள் இருந்தனர்.

### புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட

# மகளிர் அணி - மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர்கள் எஸ்,ரகுபதி – சிவ,வீ,மெய்யநாதன் சிறப்புரை! கே,கே,செல்லப்பாண்டியன் பங்கேற்பு!

புதுக்கோட்டை,ஜன.19- வெல்லும் தமிழ்ப் பெண்கள் டொல்டா மண்டல திமுக மகளிர் அணி மாநாடு வரும் 26/1/2026 அன்று தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டியில் நடைபெறுவதை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு தெற்கு மாவட்ட திமுக மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் கனிம வளத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தலைமையில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் வரவேற்பில், பிற்படுத்தபட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் முன்னிலையில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன்,

கழக மகளிர் அணி துணை செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பவானி ராஜேந்திரன், கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளர் சத்யா பழனிகுமார், சேலம் முன்னாள் மேயரும் கழக மகளிர் தொண்டரணி துணை செயலாளருமான ரேகா பிரியதர்ஷிணி, கழக மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளர் டாக்டர் யாழினி ஆகியோர் பங்கேற்று அலோசனைகளை வழங்கினர். நிகழ்வில்

டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், வி.ஆர்.கார்த்திக் தொண்டைமான், சுப.சரவணன், கே.ஆர்.என். போஸ், டாக்டர் அண்ணாமலை ரகுபதி, அரு.வீரமணி, பி.ராஜேஸ்வரி, ஞான.இளங்கோவன், அடைக்கலம், துணை மேயர் எம்.லியாகத் அலி, வே.ராஜேஸ், அபிதாஹீர், மு.க.ராமகிருஷ்ணன், வழக்கறிஞர் மணவழகன், டாக்டர் செ.குறிஞ்சிவாணன், மாநில, மாவட்ட, மாநகர ஒன்றிய, நகர ,பேரூர் கழக செயலாளர்கள் , நிர்வாகிகள் ,வடக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தவசு மணி மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அ. பிரபா தெற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் தேவி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர் சையது அலி பாத்திமா உள்ளிட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள், ஒன்றிய அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.

# அ.தி.மு.க. தேர்தல் வாக்குறுதி: அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கண்டனம்!

சென்னை, ஜன.19 - கடந்த ஐந்து ஆண்டுகளாக திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையே காப்பியடித்து தேர்தல் வாக்குறுதியாக வெளியிட வேண்டிய அளவுக்கு அ.தி.மு.க.வின் நிலைமை பரிதாபமாக போய்விட்டது என அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

ஒவ்வொரு தேர்தலிலும் கதாநாயகனாக திகழும் திமுகவின் தேர்தல் அறிக்கை வெளியாவதற்கு முன்பே அறிவாலயம் வாசலில் குத்த வைத்து காத்திருக்கும் அதிமுகவினர், திமுகவின் தேர்தல் அறிக்கை வெளியானதும் முதல் காப்பியை வாங்கிக்கொண்டு, அதை அப்படியே காப்பியடித்து அதிமுகவின் தேர்தல் அறிக்கையாக வெளியிடுவது தான் வழக்கமான நடைமுறை. இந்த முறை, அதில் விசித்திர மாற்றத்தை செய்து தேர்தல் அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களுக்கு “டூப்” போட்டு அறிக்கை வெளியிட வேண்டிய அளவுக்கு அதிமுகவின் நிலைமை பரிதாபமாக போய்விட்டது !

2021ல் திமுகவின் தேர்தல் அறிக்கை வெளியான போது, தமிழ்நாட்டின் நிதி நிலைமை சரியில்லை எனவே இதையெல்லாம் நிறைவேற்றவே முடியாது என்றார் பழனிசாமி. ஆனால், தமிழ்நாட்டை அனைத்து தளங்களிலும் முன்னேற்றியதுடன், எதையெல்லாம் தி.மு.க.வால் செய்ய முடியாது என்று எதிர்கட்சி தலைவர் சொன்னாரோ, அதை எல்லாம் நம் திராவிட நாயகன் முதலமைச்சர் வெற்றிகரமாக செயல்படுத்தி காட்டிவிட்டார்.

இப்போது புதிதாக எதுவும் சிந்திக்க திராணி இல்லாமல் திமுக அரசின் பழைய திட்டங்கள் மீது ஸ்டிக்கர் ஒட்டும் அறிவிப்புகளை வெளியிடுகிறது அதிமுக.

அவர்கள் கட்சியின் சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு அமைக்கப்பட்டுள்ள நிலையில், அதில் உள்ளவர்களின் திறமை மீது நம்பிக்கை இல்லாமல், திமுக அரசின் சாதனை திட்டங்களை ரோல் மாடலாகக் கொண்டு, அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

இது உங்களுக்கு செட் ஆகல சார். வெயிட் பண்ணுங்க. உங்க மூளையை இப்ப கசக்க வேண்டாம். எப்போதும் போல இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைக்கும் #திமுக_தேர்தல்_அறிக்கை வந்த பிறகு, அதை முழுமையாக உங்க பழைய ஜெராக்ஸ் மிஷினில் காப்பி எடுக்கலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி போதகாடு ஊராட்சியில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளரும், மாவட்ட ஆதி திராவிட நலக்குழு உறுப்பினருமான பி.எஸ்.சரவணன் 250 மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு நலவாரிய அட்டைகளை வழங்கினார். உடன் ஈஸ்வரன்,வெள்ளி, மாது, ராஜேந்திரன், தங்கராஜ் உள்ளிட்ட தி.மு.க.வினர் உள்ளனர்.

### திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர்

# கே.மாரிமுத்து தாயார் தங்கச்சி அம்மாள் மறைவு!

## பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. - கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், ஜன19.



திருத்துறைப்பூண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு உறுப்பினரும், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில துணைத் தலைவருமான கே. மாரிமுத்து அவர்களின் தாயார் தங்கச்சிஅம்மாள் அவர்கள் 18.01.2026 அதிகாலை வயது முதிர்வின் காரணமாக இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அம்மையாரின் மறைவின் தகவலறிந்த மாவட்ட கழக செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், கூட்டணி கட்சியின் நிர்வாகிகளும் தங்கள் இரங்கலை தெரிவித்து வருகின்றனர்.

மறைந்த தங்கச்சி அம்மையாரின் இறுதி ஊர்வலம் கோட்டூர் ஒன்றியம் காடுவாக்குடி கிராமம் அவரது இல்லத்திலிருந்து நேற்று (ஞாயிற்று கிழமை) புறப்பட்டு இறுதி அடக்கம் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. முத்துராமலிங்கம்

**சனவரி 19 (2019)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

முதுகுளத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும் – மாவட்ட கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.


கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி. மன்னார்

**சனவரி 19 (1991)**



கழகம் தொடங்கியபோதே உறுப்பினராகி பணியாற்றியவர்.

முதன்முதலாக தான் வசிக்கும் வடபெரும்பாக்கம் பகுதியில் கிளைக் கழகத்தை தொடங்கி அதன் செயலாளராக பொறுப்பு வகித்து தொடர்ந்து இருபது ஆண்டுகள் கிளைச் செயலாளர் பொறுப்பு வகித்தவர்.

வடபெரும்பாக்கம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், ஊராட்சி மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து மக்கள் பணியாற்றியவர்.

1966ல் விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**